# கள்ள நோட்டுகள் ஏற்படுத்தும் விலைவாசி உயர்வு

தி. ராஜ் பிரவின்

First Published : 22 Feb 2011 02:20:00 AM IST

கடந்த சில நாள்களாக அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வு தேசிய அளவில் ஒரு முக்கியப் பிரச்னையாக உருமாறி வருகிறது. உணவு தானியங்கள், காய்கறிகள் விலை உயர்வால் ஏழை மற்றும் நடுத்தர மக்களின் உணவுத் தேவைகள், பொருளாதார நலன்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த பிப்ரவரி 2010-ல் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் நடந்த, மாநில முதல்வர்கள் மாநாட்டில் மத்திய அரசின் சார்பில் உணவுப் பொருள்களின் கடும் விலை உயர்வு குறையத் தொடங்கும் என்றும், விளைச்சல் மற்றும் கால சுழற்சியால் ஏற்பட்ட விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

கடந்த ஓராண்டாக வாரந்தோறும், மாதந்தோறும் விலைவாசி உயர்ந்ததே தவிர, குறையவில்லை. மத்திய நிதி அமைச்சர், திட்டக்கமிஷன் துணைத் தலைவர், நிதித்துறைச் செயலர் என்று மாறி மாறி விலைவாசி கட்டுக்குள் வந்துவிடும் என்று கூறி வந்தாலும், உண்மை நிலை மாறாகவே காணப்படுகிறது. இத்தகைய நடைமுறைச் சூழலில் விலைவாசி உயர்வுக்குப் பல விவசாயக் காரணங்கள், வானிலை மாற்றங்கள், வெளிநாட்டு இறக்குமதி, ஏற்றுமதிப் பிரச்னைகள் பற்றியே அதிக அளவில் விவாதிக்கப்பட்டு வருகிறது.

இந்தியச் சந்தையில் உள்ள பணச் சுழற்சியே விலை உயர்வுக்குக் காரணம் என்ற நோக்கில் வங்கிகள் வாயிலாக பல்வேறு பொருளாதாரக் கட்டுப்பாடு முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இத்தகைய நடைமுறைச் சூழலில் நாள்தோறும் செய்தி ஊடகங்களில் வெளிவரும் கள்ள நோட்டுகள் பிரச்னை ஒரு பெரிய விவாதமாக உருவாகாமல் உள்ளது. குறிப்பாக, குமரியில் கால்நடை வியாபாரிகள் முதல் தில்லியில் தொழில் அதிபர்கள்வரை கள்ள நோட்டு மாற்றும்போது பொருளாதார வழக்குகளில் கைது செய்யப்பட்டு பரபரப்பு ஏற்படும். மறுநாள் பிற செய்திகளால் அவை மறக்கப்பட்டு விடுவது வாடிக்கை நிகழ்வாகிவிட்டது. இத்தகைய நடைமுறைச் சூழலில் கள்ள நோட்டுகள் ஏற்படுத்தும் பொருளாதார இழப்புகளைப் பற்றித் தெரிந்துகொள்வது அவசியம்.

நமது நாடு பொருளாதாரம், தகவல் தொழில் நுட்பம் மற்றும் பிற துறைகளில் வேகமாக வளர்ந்து வரும் சூழலில் பொருளாதார இடர்பாடுகளை உருவாக்கி நமது நாட்டின் வளர்ச்சியைத் தடுக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகள் முயல்கிறதே என்று சிந்திக்கும் அளவில் கள்ள நோட்டுப்பிரச்னை இந்திய சில்லறை சந்தைகளில் நிலவுகிறது. ஆயிரம் மற்றும் ஐநூறு ரூபாய் கள்ள நோட்டுகள் பிடிபடுவது வெகு சாதாரணமான பொருளாதார நிகழ்வுகளாகிவிட்டன. நமது நாட்டில் பல சிறு வணிகர்கள், நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அதிக மதிப்புள்ள பணத்தைப் பெறுவது இல்லை என்ற அறிவிப்புப் பலகைகள் வாயிலாக பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் அளவுக்கு மோசமான பொருளாதார நிலை நிலவுகிறது.

குறிப்பாக, அதிக அளவு மக்கள் கூடும் பலசரக்குக் கடைகள், பெட்ரோல் நிரப்பும் மையங்களில் இத்தகைய பொருளாதாரச் சூழலை அதிகமாகக் காண முடியும். வங்கிகளில் நீண்டநாள் வாடிக்கையாளர்கள் பணம் கட்டும்போது கள்ள நோட்டுகள் இருப்பின் அவை அப்புறப்படுத்தப்பட்டு, அழிக்கப்பட்டு வாடிக்கையாளரே பொருளாதார இழப்புகளைச் சந்திக்கும் சூழல் நிலவுகிறது.

இவ்வாறு பெரும் மதிப்பிலான பணப் பரிமாற்றம் செய்யப்படும்போது பின்பற்றப்படும் பொருளாதார நடைமுறைகள், கண்காணிப்பு முறைகள் சிறிய மதிப்பு பணங்களில் பின்பற்றப்படுவது கிடையாது.

எனவே, நூறு, ஐநூறு மற்றும் ஆயிரம் ரூபாய் கள்ள நோட்டுகளே பிடிக்கப்பட்டு வழக்குகள் தொடரப்படுகின்றன. மாறாக, ஒன்று முதல் ஐம்பது ரூபாய் வரையிலான கள்ள நோட்டுகள் சந்தையில் சுதந்திரமாக வலம் வருகின்றன. மறுபுறம் குறைந்த மதிப்பிலான ரூபாய் நோட்டுகள் ஒருநாளில்கூட பல கைகள் மாறும் வேகமான சுழற்சித் தன்மை கொண்டது.

எனவே ஒரு பத்து ரூபாய் கள்ள நோட்டு ஒரு நாளில் எளிதாகப் பத்து கைகள் மாறும்போது நூறு ரூபாய் பணப்பரிமாற்ற மதிப்பை ஏற்படுத்தி விடுகிறது. தனது ஆயுளில் பல நூறு கைகள் மாறி பல ஆயிரம் மதிப்பிலான ஒரு கறுப்புப் பொருளாதாரம் உருவாகக் காரணமாகி விடுகிறது.

சிறிய மதிப்பிலான கள்ள ரூபாய் நோட்டுகள் கிராமப்புற விவசாயச் சந்தைகள், கோயில் திருவிழாக்கள், அதிக அளவு மக்கள் நடமாட்டம் உள்ள பொதுஇடங்களில் பணமாற்றம் செய்யும்போது கண்காணித்து, கண்டுபிடிப்பது கடினம். இவற்றின் தொடர் சுழற்சி மக்கள் மத்தியில் பணத்தின் மதிப்பைச் செயற்கையாகக் குறைத்து விலைவாசி உயர்வை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு சிவகாசியில் அமெரிக்க நாட்டு டாலரையே அச்சடித்துள்ளதை நினைவில் கொள்ள வேண்டும். இதேபோல அதிகமாகக் கண்காணிக்க முடியாத சில்லறை நோட்டுகளை புதிய அச்சு தொழில்நுட்பங்கள் கொண்டு உருவாக்கி நமது பொருளாதாரத்தை எளிதாகச் சரிக்க முடியும்.

மத்திய கிழக்கு நாடுகளில் பல தீவிரவாதக் குழுக்கள் அமெரிக்காவின் பொருளாதாரத்தை அழிக்க சர்வதேசச் சந்தைகளில் உருவாக்கிய டாலர் கள்ளநோட்டுகள் மிகப்பெரிய பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தின. சுதாரித்துக்கொண்ட அமெரிக்கா, பல பொருளாதார மற்றும் வர்த்தக முயற்சிகள் வாயிலாக தனது பொருளாதாரத்தைத் துரிதமாகக் காப்பாற்றிக் கொண்டது. இத்தகைய சர்வதேச அரசியல் நிகழ்வுகளை நாம் எளிதாக மறக்க முடியாது. அவற்றில் இருந்து பாடம் கற்க வேண்டியது அவசியம்.

எனவே, நமது நாட்டை ஆளும் பொருளாதார நிபுணர்கள் கள்ள நோட்டுப் பிரச்னையும் தொடர் விலைவாசி உயர்வுக்கு ஒரு முக்கியக் காரணம் என்பதைப் புரிந்துகொண்டு ஆக்கபூர்வமான பொருளாதார மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தேவைப்படும் மாற்றுப் பொருளாதார நடவடிக்கைகள் வேளாண்மை மற்றும் கிராமப்புற சில்லறைச் சந்தைகளில் சிறிய மதிப்பிலான அதிக அளவிலான கள்ள நோட்டுகளை எளிதாக மக்கள் மத்தியில் புழங்கவிட முடியும்.

எனவே, கிராமப்புற அளவில் உள்ள வங்கி அதிகாரிகள், அரசின் அங்கீகாரம் பெற்ற தனியார் நிதி நிறுவனங்கள், தபால் நிலைய அதிகாரிகள், கூட்டுறவுப் பணப் பரிமாற்றம் செய்யும் அலுவலர்கள், வியாபார சங்கப் பிரதிநிதிகள் கொண்ட கண்காணிப்பு மையங்களை அமைத்து மத்திய மற்றும் மாநில அரசுகள் கள்ள நோட்டுப் பரிமாற்றத்தைக் கண்காணிக்க வேண்டியது அவசியம்.

சிறு மதிப்பிலான கள்ள நோட்டுகளை அச்சடிக்கும்போது செலவு அதிகம் என்பதால் கள்ள நோட்டுகளைக் கண்காணிக்க வேண்டியது இல்லை என்று பொருளாதாரக் கண்காணிப்பு அமைப்புகள் கருதலாம். நடவடிக்கை எடுக்காமலும் இருக்கலாம்.

ஆனால், நோக்கம் நமது நாட்டின் பொருளாதாரத்தை அழிப்பதாக இருக்கும்பட்சத்தில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதார தீவிரவாத சக்திகளை இரும்புக்கரம் கொண்டு கட்டுப்படுத்துவது மத்திய அரசின் பொருளாதாரக் கடமையாகும்.

எனவே, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளில் துரிதமாக சிறிய மதிப்பிலான பணத்தை மாற்றி அதிக அளவு நாணயங்களை வெளியிட்டால் நிலைமையைச் சமாளிக்கவும் கட்டுப்படுத்தவும் முடியும்.

கள்ளநோட்டுப் பிரச்னையைத் தடுக்க வங்கிகள் வாயிலாக சிறிய அளவிலான பணப்பரிமாற்றம் செய்ய அதிக அளவு காசோலை மற்றும் வரைவோலைகளை வழங்கியும், பயன்படுத்தத் தேவையான பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

தொழிலாளர் சம்பளம், சிறு நிறுவனங்களின் பணப்பரிமாற்றம், சேவைத் துறைகளின் பணப் பரிமாற்றம் போன்றவற்றை நவீன தகவல் தொழில்நுட்பம் கொண்டு முறைப்படுத்தியும், கிராம அளவில் மக்கள் கூடும் இடங்களில் நடமாடும் வங்கிச் சேவைகளைப் பயன்படுத்தி கள்ளநோட்டு நடமாட்டத்தை வெகுவாகக் கட்டுப்படுத்த முடியும்.

இப்போது கள்ளப் பணப் பிரச்னைகளைக் கையாளும் பொருளாதார அமைப்புகளின் நடைமுறைத் தேவைகள், தொழில்நுட்ப மற்றும் போக்குவரத்துத் தேவைகளை நிறைவு செய்தும், கள்ளநோட்டு வழக்குகளைக் குறைந்தகால அளவில் நடத்தி அதிகப்படியான தண்டனையையும் வழங்கி நமது நாட்டைப் பாதிக்கும் பொருளாதாரக் குற்றங்களைத் தடுக்க வேண்டியது அவசியம்.

எனவே, இன்றைய விலைவாசி உயர்வுப் பிரச்னையை பல வழிகளில் தீர்க்க முயற்சிகளை மேற்கொள்ளும்போது கள்ளநோட்டு போன்ற பொருளாதார ஆயுதங்கள் நமது பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்காத வகையில் மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

கட்டுரையாளர்: வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர்.

**நெல் விதைப் பண்ணை விவசாயிகள் விதை சுத்திகரிப்பு செய்ய வலியுறுத்தல்**

First Published : 22 Feb 2011 09:02:26 AM IST

விருதுநகர், பிப். 21: விருதுநகர் மாவட்டத்தில் நெல் விதைப் பண்ணை விவசாயிகள் கவனமாக விதை சுத்திகரிப்புச் செய்ய வேண்டும் என விதைச் சான்று உதவி இயக்குநர் நாராயண பிரசாத் வலியுறுத்தி உள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நெல் விதைப் பண்ணைகளில் அறுவடை செய்து களத்தில் உலர்த்தும்போது பிற நெல் கலந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நன்கு உலர்த்திய பின்னர் தூசிகள் மற்றும் பதர்களை நீக்கி விதைக் குவியலை சீரான எடையில் புதிய சாக்குகளில் வைக்க வேண்டும்.

இக்குவியலை விதைச் சான்று அலுவலர் ஆய்வு செய்த பின்னரே சுத்திகரிப்பு நிலையம் கொண்டு செல்ல வேண்டும். அறுவடை செய்த நாளில் இருந்து 3 மாதத்திற்குள் குவியலை சுத்திகரிப்புப் பணிக்குக் கொண்டு வரவேண்டும்.

அதில் பிற ரக விதைகள் இல்லாத குவியலே விவசாயிகள் உபயோகிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படும். அதையடுத்து சுத்தம் செய்து முடித்த பின்னர் விதைச் சான்றுத் துறையின் அங்கீகாரம் மற்றும் அனுமதிக்கப்பட்ட விவரங்கள் அச்சிட்ட புதிய சாக்குகளில் சேகரித்து ஈய முத்திரை இடப்படும்.

இப்பணியின்போது மூன்று எண்ணத்தில் விதை மாதிரிகள் 400 கிராம் அளவில் எடுக்கப்படும். இவற்றில் ஒரு மாதிரி சுத்திகரிப்பு நிலையத்தில் இருப்பு வைக்கப்படும். ஒரு மாதிரி விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் இருப்பு வைக்கப்படும். மற்றொரு மாதிரி மட்டுமே விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

விதைப் பரிசோதனை நிலையத்தில் முளைப்புத் திறன், புறத்தூய்மை, ஈரப்பதம், மற்றும் பிற ரக விதைகள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். இவற்றில் தேர்ச்சி பெறும் விதைக் குவியல்களுக்கு மட்டுமே சான்று அட்டைகள் பொருத்தப்படும்.

அதன் பின்புதான் வேளாண்மை விரிவாக்க மையம் மூலமாகவோ அல்லது தனியார் விதை விற்பனை நிலையம் மூலமாகவோ விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும்.

எனவே, நெல் விதைப் பண்ணைக்குப் பதிவு செய்த விவசாயிகள் மேற்காணும் வழிமுறைகளைப் பின்பற்றி உரிய காலத்தில் சுத்திகரிப்புப் பணியை மேற்கொண்டு பயனடையுமாறு விதைச்சான்று உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**செடிகளின் வளர்ச்சியில் நுண்ணுரங்களின் பங்கு**

First Published : 22 Feb 2011 09:08:29 AM IST

திண்டுக்கல், பிப். 21: செடிகளின் வளர்ச்சியில் நுண்ணுரங்கள் பங்கு குறித்து திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை வட்டார வேளாண் உதவி இயக்குநர் பெ.பாஸ்கரன் கீழக்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

அவரது செய்திக் குறிப்பு:

பயிர்களுக்கு உரம் இடுதல் என்றாலே உழவர்களுக்கு தெரிந்தது தழைசத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து என்ற யூரியா, சூப்பர்,பொட்டாஷ் உரங்கள் மட்டுமே. ஆனால் இந்த 3 உரங்கள் தவிர, இதர பலவகை சத்துக்கள் குறைபாட்டினால் செடிகள் மடிந்து குறைந்த மகசூல் கொடுக்கச் செய்திடும். இதனைத் தவிர்த்திடும் உரங்களைத்தான் நுண்ணுயிர் உரங்கள் என்கிறோம். இந்த உரங்கள் சிறிதளவு தேவைப்பட்டாலும் மிகப்பெரிய பலனைத் தந்துவிடும்.

கால்சியம் என்ற சத்து குறைபாடு ஏற்பட்டால் நெல் மற்றும் சிறுதானிய பயிர்களில் வெளிவரும் புதிய இலைகள் சுருண்டும், வெளிறியும் தோன்றும். பயிர்கள் வளர்ச்சி குறைவாக காணப்படும். பயறு வகை பயிர்களில் இலைகள் மற்றும் பிஞ்சுகள் காய்ந்து உதிர்ந்து விடும். எண்ணெய் வித்து பயிர்களில் புதிதாக வெளிவரும் இலைகளின் பச்சயம் இல்லாது வெள்ளையாக இருக்கும். கந்தகச் சத்து குறைபாடு தென்பட்டால் நெல் மற்றும் சிறுதானிய பயிர்கள் வெளிறி இளம் பச்சை நிறத்தில் இருக்கும். புதிய இலைகள் வெளிறி காணப்படும். பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்களின் வளர்ச்சி பாதித்தும், செடிகள் மிகக் கரும்பச்சை நிறத்திலும் காணப்படும்.

போரான் சத்து குறைபாடு தென்பட்டால் நெல் மற்றும் சிறுதானிய பயிர்களின் வளர்ச்சி குன்றி இலைகள் தடிப்பம் இன்றி ஒடிந்துவிடும் தன்மையுடன் இருக்கும்.

பயறு வகை பயிர்கள் வளர்ச்சி குன்றி இலைகள் சுருண்டும் இருக்கும். எண்ணெய் வித்து பயிர்கள் புதிய இலைகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து சுருண்டுவிடும். தானியங்கள் உருவாவது குறைந்துவிடும்.

காப்பர் சத்து குறைபாடு தென்பட்டால் நெல் மற்றும் சிறு தானிய பயிர்களின் புதிய இலைகள் நீலம் கலந்த பச்சை நிறத்தில் மாறும். தூர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். எண்ணெய் வித்து பயிர்களின் புதிய இலைகள் பச்சையம் இன்றி வெளிறி காணப்படும். இரும்புச் சத்து குறைபாடு தென்பட்டால் நெல் மற்றும் சிறுதானிய பயிர்களின் இலைகளின் நரம்புகள் வெளிறிவிடும். பயறு மற்றும்

**தமிழகம், புதுவையில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

First Published : 22 Feb 2011 02:44:08 AM IST

சென்னை, பிப். 21: தமிழகம், புதுவையில் ஒரு சில இடங்களில் செவ்வாய்க்கிழமை மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வளி மண்டலத்தின் உயர் அடுக்குகளில் மேகக் கூட்டங்களில் சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மழை விவரம்: தமிழகத்தில் திங்கள்கிழமை காலையில் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம், சூரங்குடி ஆகிய இடங்களில் 20 மில்லி மீட்டரும், விருதுநகரில் 10 மில்லி மீட்டரும் மழை பெய்துள்ளது. இதேபோல தாம்பரம் உள்ளிட்ட சென்னையின் புறநகர் பகுதிகளிலும் திங்கள்கிழமை காலை மழை பெய்தது.

சென்னையில்...: சென்னையில் ஒரு சில இடங்களில் செவ்வாய்க்கிழமை இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மீன் உணவுப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சி**

First Published : 22 Feb 2011 09:01:19 AM IST

ராமநாதபுரம், பிப். 21: இறால் மீனிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி தங்கச்சிமடம் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரு நாள்கள் நடைபெற்றன.

தங்கச்சிமடம் எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனமும், ஹைதராபாத் தேசிய மீன் வளர்ச்சி வாரியமும் இணைந்து மீனவப் பெண்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருள்கள் தயாரிப்புப் பயிற்சியை இரு நாள்கள் நடத்தினர்.

துவக்க நாள் விழாவுக்கு மண்டபம் மீன்வளத் துறை உதவி இயக்குநர் பி.சிவராமன்,ராமகிருஷ்ணபுரம் குமரேசன், சுந்தரமுடையான் கண்ணன், சாத்தக்கோன் வலசை ஊராட்சி எழுத்தர் புல்லாணி குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிராம வளமைய அலுவலர் ஸ்ரீகிருபா, ராமநாதபுரம் கிங்ஸ் கேட்டரிங் கல்லூரி நிறுவன பயிற்சியாளர் பாரத் ஆகியோர் பயிற்சியளித்தனர். இறால் மீனிலிருந்து ஊறுகாய், வடை, கோலா உருண்டை, கட்லெட், ஆம்லெட், பக்கோடா ஆகியவற்றை மிகவும் சுவையாக தயாரித்தல், மசாலா கருவாடு செய்முறை பயிற்சி ஆகியன குறித்து மீனவப் பெண்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டது.

பீடு டிரஸ்டை சேர்ந்த செல்வி.ஆரோக்கியராணி, செல்வி. மெர்லின், கீழக்கரை முகம்மது சதக் பணியாளர் சசிக்குமார்,தேவாஸ்டோர் உரிமையாளர் ஆல்வின் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

நிறைவு நாள் விழாவில் ராமேசுவம் மீன்வளத் துறை உதவி இயக்குநர் சாம்ராஜ், தங்கச்சிமடம் யாஹூதீன் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டு மீனவப்பெண்கள் சுயமாகத் தொழில் செய்து முன்னேறுவதற்கான ஆலோசனைகளையும், மீன் உணவுப் பொருள்களில் உள்ள சத்துக்கள், நன்மைகள், தர நிரணயம் ஆகியன குறித்தும் விளக்கமளித்தனர். மீனவப்பெண்கள் பலர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.

## 91,500 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு

First Published : 21 Feb 2011 10:46:31 AM IST

கரூர், பிப். 20: நிகழாண்டில் 91,500 விதை மாதிரிகளை ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் கோவை விதைச் சான்று இயக்கக விதைச் சான்று இணை இயக்குநர் ரா. கந்தசாமி.

இதுகுறித்து கரூரிலுள்ள விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் முறைகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்த பின்னர் அவர் கூறியது:

விவசாயத்தில் மிக முக்கியமான இடுபொருள் விதையாகும். விதையின் தரத்தை விதைப்பதற்கு முன்பே விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இப்போது, தமிழகத்தில் விதைச் சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் 29 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வகங்கள் மூலமாக நிகழாண்டில் 91,500 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்த நிலையில், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள், விதை மாதிரிகளை ஆய்வகத்திற்கு அனுப்பி, ஆய்வு செய்து பயன்பெறலாம் என்றார் கரூர் விதைப் பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண் அலுவலர் அ. வெங்கட்ராமன்.

**91,500 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு**

First Published : 21 Feb 2011 10:46:31 AM IST

கரூர், பிப். 20: நிகழாண்டில் 91,500 விதை மாதிரிகளை ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் கோவை விதைச் சான்று இயக்கக விதைச் சான்று இணை இயக்குநர் ரா. கந்தசாமி.

இதுகுறித்து கரூரிலுள்ள விதைப் பரிசோதனை ஆய்வகத்தில் விதை மாதிரிகள் ஆய்வு செய்யப்படும் முறைகள் மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்த பின்னர் அவர் கூறியது:

விவசாயத்தில் மிக முக்கியமான இடுபொருள் விதையாகும். விதையின் தரத்தை விதைப்பதற்கு முன்பே விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

இப்போது, தமிழகத்தில் விதைச் சான்றளிப்புத் துறையின் கட்டுப்பாட்டில் 29 விதைப் பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த ஆய்வகங்கள் மூலமாக நிகழாண்டில் 91,500 விதை மாதிரிகள் ஆய்வு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

இந்த நிலையில், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள், விதை மாதிரிகளை ஆய்வகத்திற்கு அனுப்பி, ஆய்வு செய்து பயன்பெறலாம் என்றார் கரூர் விதைப் பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண் அலுவலர் அ. வெங்கட்ராமன்.

**துவங்கியது கோடை வெயில்: தர்பூசணி வரத்து அதிகரிப்பு**

First Published : 21 Feb 2011 09:46:55 AM IST

தாராபுரம், பிப். 20: திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டாரத்தில் கோடை வெயிலின் தாக்கம் தற்போதே துவங்கியுள்ள நிலையில், தர்பூசணிப் பழங்களின் வரத்து அதிகரித்துள்ளது.

கோடை காலத்தில் காங்கயம் பகுதியில் அதிக அளவுக்கு தர்பூசணிப் பழங்கள் விற்பனை செய்யப்படும். பிப்ரவரி முதல் வாரத்திலிருந்து பூளவாடி, குண்டடம், சூரியநல்லூர், தாயம்பாளையம், ஆறுதொழுவு, நிழலி உள்ளிட்ட பகுதிகளில் விளைந்த தர்பூசணிப் பழங்கள் கொண்டு வரப்பட்டு, சில்லறை விற்பனையாளர்கள் மூலம் விற்பனை செய்யப்படும்.

மார்ச் முதல் வாரத்திலிருந்து திண்டிவனம், ஜெயங்கொண்டாம், தஞ்சை, அரியலூர், பெங்களூர் பகுதிகளில் இருந்து ஏராளமான தர்பூசணிப் பழங்கள் வரவழைக்கப்படும்.

தற்போது வெயில் துவங்கியுள்ளதையொட்டி, தர்பூசணிப் பழங்களின் வரத்து துவங்கியுள்ளது. இதுகுறித்து வியாபாரி தண்டபாணி கூறியது:

கடந்த ஆண்டு விளைச்சல் அதிகமாக இருந்ததால், ஒரு கிலோ தர்பூசணி ரூ.1-க்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், நடப்பாண்டில் தொடர்மழை, சாகுபடி பரப்பு குறைவு உள்ளிட்ட காரணங்களால் விளைச்சல் குறைந்துள்ளது.

இதனால் கிலோ ரூ.8.50 வரை கொள்முதல் செய்யப்படுகிறது. நாங்கள் கிலோ ரூ.12 என்ற விலையில் தர்பூசணியை விற்பனை செய்கிறோம்.

விலை அதிகமிருப்பினும் மக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்.

**வளர்ப்புப் பறவைகள் மாதிரிப் பண்ணைத் திறப்பு**

First Published : 21 Feb 2011 10:51:04 AM IST

பெரம்பலூர், பிப். 20: பெரம்பலூர் அருகே வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில் வளர்ப்புப் பறவைகள் மாதிரிப் பண்ணைத் திறப்பு விழா சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு ரோவர் கல்வி நிறுவனங்களின் துணைத் தலைவர் வி. ஜான் அசோக் தலைமை வகித்தார். வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து முன்னிலை வகித்தார். இந்தப் பண்ணையைத் திறந்துவைத்து மாவட்ட ஆட்சியர் மா. விஜயகுமார் பேசியது:

விவசாயத்தை மட்டுமே முதன்மைத் தொழிலாக செய்துவரும், விவசாயிகளுக்கு சாகுபடி இல்லாத காலங்களில் வருவாய்க் கிடைக்க விவசாயம் சார்ந்த, ஏதாவது ஒரு உபதொழில் செய்வது அவசியமாகும். அந்த வகையில், கால்நடை வளர்ப்பு, வளர்ப்புப் பறவைகளான வான்கோழி, கின்னிக் கோழி, நாட்டுக் கோழி, காடை, புறா உள்ளிட்ட பறவைகளை வளர்ப்பதன் மூலம், விவசாயிகளுக்கு உயர் வருவாய் கிடைப்பதோடு, அதனுடைய எச்சங்களை வயலுக்கு எருவாகப் பயன்படுத்தி, மண்வளத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும்.

மேலும், வீட்டில் இடவசதி குறைவாக உள்ளவர்கள் இதுபோன்ற பறவைகளை வளர்ப்பதற்கு வசதியாக, நவீன முறையில் கூண்டுகளும், வேளாண் அறிவியல் மைய மாதிரிப் பண்ணையில் உள்ளன.

எனவே, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இதைப் பின்பற்றி பயனடைய வேண்டும் என்றார் விஜயகுமார்.

விழாவில் வேளாண்மை இணை இயக்குநர் சி. சிவக்குமார், மாவட்ட நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குநர் மா. மணிமாறன், உதவி செயற் பொறியாளர் என். ராஜேந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தர்பூசணிப் பயிரை சேதப்படும் மயில், காகங்கள்**

First Published : 21 Feb 2011 12:28:20 PM IST

தாராபுரம், பிப். 20: தாராபுரம் வட்டத்தில் தர்பூசணிப் பயிரை மயில், காகங்கள் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

தாராபுரம் வட்டத்தில் சூரியநல்லூர், குண்டடம், சத்திரம், செட்டிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டு, பயிர் அறுவடை செய்யும் தருவாயில் உள்ளது.

இந்நிலையில் மயில்களும், காகங்களும் தர்பூசணியைச் சேதப்படுத்தி வருகின்றன. இதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

இது தொடர்பாக கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து கூறுகையில், பட்டாசு வெடித்து காக்கைகளை விரட்டினாலும், மயில்களை விரட்ட முடியவில்லை. எனவே வனத் துறையினர் மயில்களைப் பிடித்து, வனப்பகுதியில் வட வேண்டும். இல்லையெனில் தர்பூசணி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுவர் என்றார்.

**விவசாயிகளுக்கு தொழிற் நுட்ப பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,00:06 IST

கள்ளக்குறிச்சி : வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட தொழிற் நுட்ப பயிற்சியளிக்கப்பட்டது. வேளாண் வணிக துணை இயக்குனர் சண்முகம் தலைமை தாங்கினார்.வேளாண்மை அலுவலர் செந்தில் (பொறுப்பு) வரவேற்றார். விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் (உழவியல்) செல்வராஜீ, சின்னசேலம் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ், வேளாண்மை

அலுவலர்(உழவர் சந்தை) பெரியசாமி, பொறியியல் துறை இள நிலைப் பொறியாளர் துரை, கால்நடை உதவி இயக்குனர் அழகரசன், வெள்ளாறு உப வடி நிலக் கோட்ட உதவி செயற்பொறியாளர் அன்பு இளங்கோ, மீன் வள உதவி இயக்குனர் சீனுவாசன், துணை வேளாண்மை அலுவலர் சுப்புராஜ் சிறப்புரையாற்றினர். உதவி வேளாண்மை அலுவலர்(வேளாண் வணிகம்) நாகராஜ் நன்றி கூறினார்.

**திருக்கோவிலூர் பகுதியில் தர்பூசணி அமோக விளைச்சல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,23:51 IST

திருக்கோவிலுர் : திருக்கோவிலூர் பகுதியில் தர்பூசணி விளைச்சல் அமோகமாக உள்ளது. பழங்கள் அறுவடை செய்யப்பட்டு பல்வேறு ஊர்களுக்கு விற்பனைக்கு அனுப் பும் பணி துவங்கியது. கோடை காலத்தில் வெப் பத்தை தணிக்க இயற்கை நமக்கு அளித்திருக்கும் வரப் பிரசாதம் தர்பூசணி. வெயில் வாட்ட துவங்கிவிட்ட நிலையில் திருக்கோவிலூர் பகுதியில் தர்பூசணி விளைச் சலும் அமோகமாக உள்ளது. ஊடுபயிராக மட்டுமே பயிர் செய்து வந்த விவசாயிகள் லாபத்தை கணக்கில் கொண்டு, தற்போது தனி பயிராக நவீன தொழில் நுட்பத்துடன் சாகுபடி செய்யத் துவங்கிவிட்டனர்.

திருக்கோவிலூர் அடுத்த சித்தாத்தூர், செங்கமேடு, ஆலம்பாடி, பில்ராம்பட்டு, காரணை பெரிச்சானூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த புஞ்சை நிலங்களில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முதல் கட்டமாக தற்போது பழங்கள் அறுவடை செய்யப்பட்டு பெங்களூரு, சென்னை உள்ளிட்ட பகுதிகளுக்கு லாரிகளில் ஏற்றி அனுப்பி வைக்கப்படுகிறது. குறைவான தண்ணீரை பயன்படுத்தி, ஆள் பற்றாக்குறையை சமாளிக்க விவசாயிகள் மேற்கொண்டுள்ள இந்த விவசாயம் குறைந்த செலவில் அதிகம் லாபம் கிடைக்கும் வகையில் அமைந்துள்ளது. இந்த பயிர் சாகுபடியால் மன நிறைவு பெற்றுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

**அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி எதிரொலி : பறக்கிறது பழைய அரிசி; பதுங்குகிறது புதிய அரிசி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,01:38 IST

சேலம்: மத்திய அரசு அரிசி ஏற்றுமதிக்கு அனுமதி அளித்துள்ளதால், தமிழகத்தில் நெல் விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது. அதனால், பழைய அரிசி விலையில் உயர்வும், புதிய அரிசி விலையில் சரிவும் ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை,

நாகப்பட்டிணம், சிவகங்கை, திருவண்ணாமலை, ராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில், நெல் அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. மார்க்கெட்டுக்கு நெல் வரத்தும் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் இருந்து, 1.50 லட்சம் டன் அரிசியை ஏற்றுமதி செய்து கொள்ள மத்திய அரசு அனுமதி வழங்கி உள்ளது. அதனால், நெல் விலை உயரும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் நெல்லை இருப்பு வைக்கத் துவங்கி விட்டனர். அனைத்து வகையான நெல் விலையும் கடந்த வாரம் கிலோவுக்கு, இரண்டு ரூபாய் வரை உயர்ந்தது. நெல் விலை உயர்வை அடுத்து பழைய அரிசி, கிலோவுக்கு நேற்று ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை விலை உயர்ந்தது. நேற்று, உயர்ரக பழைய வெள்ளை பொன்னி கிலோ, 37 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் 36 ரூபாய்க்கும், பி.பி.டி., (பாபத்லால்) பொன்னி 34 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் 30 ரூபாய்க்கும் விற்கிறது.

நெல் வரத்து அதிகரித்துள்ளதால், புதிய அரிசி விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. வெள்ளை பொன்னி முதல்ரகம், 32 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் 30 ரூபாய்க்கும், பி.பி.டி., பொன்னி 27 ரூபாய்க்கும், இரண்டாம் ரகம் 25 ரூபாய்க்கு விற்கிறது. அதிகபட்சம் ஐந்து ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. புதிய ரக இட்லி அரிசி கிலோவுக்கு ஒரு ரூபாய் அதிகரித்து, 30 ரூபாய்க்கு விற்கிறது.

இது குறித்து சேலம் செவ்வாய்ப்பேட்டை அரிசி வியாபாரி சின்னதுரை கூறியதாவது : புதிய நெல் வரத்து அதிகரித்துள்ளதால், புதிய அரிசி விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு அரிசி, நெல் ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கி உள்ளதால், மாநில அரசு நெல் கொள்முதல் விலையை உயர்த்தும் என்ற எதிர்பார்ப்பில், விவசாயிகள் நெல்லை அதிக அளவில் இருப்பு வைக்கின்றனர். பழைய நெல் வரத்து குறைந்துள்ளதால், பழைய அரிசி விலை உயர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,01:26 IST

விளாத்திகுளம் : அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வால் நாட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று விளாத்திகுளத்தில் நடந்த ஓய்வுபெற்ற அலுவலர் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.ஓய்வு பெற்ற அலுவலர் சங்க மாநில செயற்குழு கூட்டம் விளாத்திகுளத்தில்

உள்ள நடராஜநாடார் திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்திற்கு மாநில தலைவர் சாகுல் ஹமீது தலைமை வகித்தார். விளாத்திகுளம் வட்ட செயலாளர் பூபாலசுப்பிரமணியன் வரவேற்றார். கூட்டத்தில் மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி 1.7.2010 முதல் 45 சதவீதம் உயர்த்தி ஆணை பெறப்பட்டவுடன் தமிழக அரசு ஓய்வூதியதாரர்களுக்கும் அகவிலை 45 சதவீதம் 1.7.2010 முதல் உயர்த்திய தமிழக முதல்வர் மற்றும் நீதித்துறை முதன்மை செயலருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும் நாட்டில் மக்களை வாட்டி வதைக்கும் அத்தியாவசிய பொருட்களின் விலைவாசியை மத்திய மாநில அரசுகள் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் மாநில பிரசார செயலாளர் வெண்மணி, மாநில பொது செயலாளர் சரவணன், மாவட்ட தலைவர் கருத்தையா உட்பட பலர் பேசினர். கூட்டத்தில் மாநில, மாவட்ட, வட்டார நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**காய்கறி சாகுபடி விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,00:25 IST

தர்மபுரி: தர்மபுரியை அடுத்த பாப்பாரப்பட்டியில் வேளாண் அறிவயில் நிலையத்தில் தோட்டக்கலை துறை சார்பில் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி நடந்தது. வேளாண் அறிவயில் நிலைய தலைவர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், காய்கறி சாகுபடி செய்ய வேண்டிய அவசியம், விற்பனை வாய்ப்பு குறித்து பேசினார். தோட்டக்கØல் துறை துணை இயக்குனர் சதாசிவம்,"திட்டமிடல், நாற்றங்கால் பராமரிப்பு, மண், உரம், பயிர் பாதுகாப்பு பணிகள், நிர்வாக முறைகள், அறுவடை தொழில் நுட்பங்கள், தரம் பிரிப்பு மற்றும் சந்தை விற்பனை' குறித்து விளக்கினார்.

உதவி பேராசிரியை இந்துமதி, "காய்கறி பயிர்களுக்கான உழவியல் மற்றும் பயிர் பாதுகாப்பு நுட்டங்கள்' குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குனர் முகுந்தன், "தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு மானிய திட்டங்கள் குறித்து' விளக்கினார். கவுரிசெட்டிப்பட்டி விவசாயி சிவலபிங்கம், சின்னபெரமனூர் பெரியசாமி, ஆணைக்கல்லனூர் மாரிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் பழனி, முனுசாமி மற்றும் மஹாராஜன் ஆகியோர் செய்திருந்தனர்.

**மஞ்சள் விலை படிப்படியாக சரிவு!**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2011,01:24 IST

ஈரோடு: வடமாநிலங்களில் மஞ்சள் தேவை குறைவாக இருப்பதாலும், தமிழகத்தில் மஞ்சள் சாகுபடி அதிகரித்து வருகிறது. இதனால், மஞ்சள் விலை படிபடியாக குறைந்து கொண்டே இருப்பதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். மஞ்சள் விலை, 2009ல் குவிண்டாலுக்கு 5,308 ரூபாயாக இருந்தது. தொடர்ந்து விலை உயர்ந்து, 16 ஆயிரத்து 889 ரூபாய் வரை உயர்ந்தது. மஞ்சள் விலை ஏற்றத்தால், மஞ்சள் சாகுபடி பரப்பளவும் உயர்ந்தது. சென்றாண்டைக் காட்டிலும் நடப்பாண்டு இரு மடங்கு மஞ்சள் உற்பத்தியானது. புதிய மஞ்சள் மார்க்கெட்டுக்கு அதிகளவு வரத்துவங்கியுள்ளது. ஜனவரி 13ம் தேதி விரளி 15 ஆயிரத்து 181 ரூபாய்க்கும், கிழங்கு 14 ஆயிரத்து 890 ரூபாய்க்கும் ஏலம் போனது.

வட மாநிலங்களில் தேவை குறைவு, வரத்து அதிகம் போன்ற காரணத்தால், மொத்த வியாபாரிகள் மஞ்சளை குறைந்து விலைக்கு ஏலம் கோருகின்றனர். நேற்று மார்க்கெட் நிலவரப்படி, ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு 654 மூட்டை வரத்தானது. விரளி குவிண்டாலுக்கு 9,900 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 11 ஆயிரத்து 380 ரூபாய்க்கும், கிழங்கு 8,037 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 11 ஆயிரத்து 117 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. 482 மூட்டை மஞ்சள் விற்பனையானது.

வெளிச்சந்தைக்கு 2,545 மூட்டை வரத்தானது. விரளி 8,016 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 11 ஆயிரத்து 201 ரூபாய்க்கும், கிழங்கு 7,819 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 10 ஆயிரத்து 810 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. அதில், 649 மூட்டை மஞ்சள் விற்பனை ஆனது.
ஈரோடு சொசைட்டிக்கு 237 மூட்டை மஞ்சள் வரத்தானது. விரளி 9,425 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 11 ஆயிரத்து 610 ரூபாய்க்கும், கிழங்கு 9,301 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 10 ஆயிரத்து 890 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. அதில், 172 மூட்டை மஞ்சள் விற்பனையானது.
கோபி சொசைட்டிக்கு 37 மூட்டை மஞ்சள் வரத்தானது. விரளி 9,697 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 12 ஆயிரத்து 60 ரூபாய்க்கும், கிழங்கு 8,110 ரூபாயில் இருந்து அதிகபட்சமாக 11 ஆயிரத்து 536 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. அதில், 24 மூட்டை மஞ்சள் விற்பனையானது.
நடப்பாண்டு விலை மேலும் மஞ்சள் விலை குறைய வாய்ப்புள்ளது என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**கரும்பு பயிரில் செவ்வழுகல் நோய் தாக்குதல் நஷ்ட ஈடு வழங்க விவசாயிகள் வலியுறுத்தல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,23:48 IST

நெல்லிக்குப்பம் : நோய் தாக்கிய கரும்பு பயிருக்கு ஆலை நிர்வாகம் உரிய நஷ்டஈடு வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். நெல்லிக்குப்பம் தனியார் சர்க்கரை ஆலைக்கு சப்ளை செய்ய பல ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் கரும்பு பயிரிடுகின்றனர். விவசாயிகள் தங்கள் விருப்பத்துக்கு கரும்பு ரகங்களை தேர்வு செய்து நடமுடியாது. ஆலை நிர்வாகம் எந்த ரகத்தை நடவு செய்யச் சொல்கிறார்களோ அந்த ரகங்களை மட்டுமே விவசாயிகள் நடவு செய்ய வேண்டும்.கோயமுத்தூர் விவசாய பல்கலைக் கழகம், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையம், இ.ஐ.டி., பாரி ஆலை ஆகியன கரும்பில் பல ரகங்களை அறிமுகப்படுத்துகின்றனர்.

நெல்லிக்குப்பம் ஆலை பகுதியில் கோக 94012 ரக கரும்பை இரண்டு ஆண்டுகளுக்கு முன் விவசாயிகளுக்கு வழங்கினர். இந்த ரக கரும்பு அதிக பரப்பில் விவசாயிகள் நடவு செய்தனர். வான்பாக்கத்தில் நடவு செய்யப்பட்ட கரும்பு பயிரில் செவ்வழுகல் நோய் தாக்கியுள்ளது. இந்நோயைக் கட்டுப்படுத்த இதுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை. இந்நோய் வேகமாக பரவும் அபாயம் உள்ளது. நோய் கண்ட பயிர்களை வேரோடு பிடுங்கி தீவைத்து கொளுத்த வேண்டும். நோய் தாக்கிய வயலுக்கு அடிக்கடி தண்ணீர் வைக்கக் கூடாது. நோய் அதிகம் தாக்கினால் கரும்பை அறுவடை செய்து விட வேண்டும் என்பதே ஆலையின் பரிந்துரை.

ஒரு புதிய ரகத்தை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முன் ஆலைக்குச் சொந்தமான நிலத்தில் குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது பயிர் செய்து நோய் தாக்குதல் உள்ளதா என கண்காணிக்க வேண்டும்.நோய் தாக்குதல் இல்லாவிட்டால் மட்டுமே விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். ஆலை நிர்வாகம் பரிந்துரை செய்த ரகத்தில் நோய் தாக்குதல் ஏற்பட்டு அதிக நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.எனவே நஷ்டஈடு வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

**விற்பனையாகாத தானிய சேமிப்பு கலன்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,21:57 IST

பொங்கலூர் : பொங்கலூர் வேளாண் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க இருப்பு வைக்கப்பட்டுள்ள தானிய சேமிப்பு கலன்கள், விற்பனையாகாமல் தேக்கம் அடைந்துள்ளன.உணவு தானியங்கள் மற்றும் பயறு வகைகளை பூச்சி தாக்குதல்களில் இருந்து நீண்ட காலம் கெட்டுப் போகாமல் சேமித்து வைக்க, இரும்பினாலான உருளை வடிவ

கொள்கலன்கள், பொங்கலூர் வேளாண் துறை அலுவலகத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இவை மானிய விலையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.சாக்கு தயாரிப்பதற்கு முன், மண் பானைகளால் செய்யப்பட்ட தானிய சேமிப்பு கலன்களையே நம் முன்னோர் பயன்படுத்தினர். சாக்குகளில் சேமித்து வைப்பதை விட, தானிய சேமிப்பு கலன் களில் சேமித்து வைக்கும்போது, எலிகளால் ஏற்படும் சேதம் தவிர்க்கப்படுகிறது.உணவு தானிய உற்பத்தி மற்றும் விவசாயம் செய்வோரின் எண்ணிக்கை குறைந்து விட்டதாலும், ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்துக்கு கொண்டு செல்ல சாக்குகளை விட, கொள்கலன்களை எடுத்துச் செல்வது கடினம் என்பதாலும் கொள்கலன் வாங்க, விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதனால், இவைகள் விற்பனையாகாமல் தேக்கம் அடைந்துள்ளன.

**வேளாண் பல்கலையில் வேலை பதிவை சரிபார்க்க வாய்ப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,21:22 IST

கோவை : மாநகராட்சி, தமிழ்நாடு வேளாண் பல்கலையில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளது. அதை, இன்று சரிபார்க்கலாம். மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஞானசேகரன் அறிக்கை: தமிழ்நாடு வேளாண் பல்கலையில், காலியாக உள்ள இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம், பதிவு செய்து காத்திருக்கும் விண்ணப்ப தாரர்களை பரிந்துரை செய்கிறது. வேலைவாய்ப்பு அலுவலகம் பதிவு மூப்பு பட்டியலை வெளியிட்டுள்ளது. இதன் உத்தேசபதிவு மூப்பு விபரங்கள்: இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணிக்கு ஏதேனும் ஒரு பட்டப்படிப்புடன் கம்ப்யூட்டர் அறிவு பெற்றிருக்க வேண்டும். 31.10.2010 தேதிப்படி 35 வயதுக்குள் இருக்க வேண்டும். எஸ்.சி., எஸ்.டி., மற்றும் பி.சி., எம்.பி.சி., பிரிவினருக்கு வயது வரம்பு இல்லை.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு மூப்பு தேதி எஸ்.சி., எஸ்.டி., பிரிவினருக்கு 13.09.1991ம் தேதி வரை, பி.சி. மற்றும் ஓ.சி., பிரிவினருக்கு 30.06.89 ம் தேதி வரை, எம்.பி.சி., பிரிவினருக்கு 23.08.1993 வரை. இந்த விண்ணப்பதாரர்கள் பட்டப்படிப்பினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொடர்ந்து புதுப்பித்திருக்க வேண்டும். கோவை மாநகராட்சியில் காலியாக உள்ள தேர்ச்சித்திறனற்ற பணியாளர் (அன் ஸ்கில்டு லேபர்) எழுதப்படிக்கத் தெரிந்தால் போதும், இதர வகுப்பினர் 01.01. 2011 ம் தேதிப்படி 35 வயதுக்குள் இருக்க வேண்டும். பி.சி., மற்றும் எம்.பி.சி., 37 வயதுக்குள்ளும், எஸ்.சி., எஸ்.டி., 40 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும். பதிவு மூப்பு எம்.பி.சி., 30.09.2009 வரை பதிவு செய்துள்ள ஆண் மற்றும் பெண், பி.சி., 26.07.2006 வரை

பதிவு செய்துள்ள பெண்கள், 16.05.2001 வரை பதிவு செய்துள்ள ஆண்கள். எஸ்.சி., மற்றும் இதர வகுப்பில் 31.08.1990 வரை பதிவு செய்துள்ள பெண்கள், 21.07.1989 வரை பதிவு செய்துள்ள ஆண்கள் பெயர் பரிந்துரை செய்யப்பட உள்ளது. மேற்கண்ட தகுதியுள்ள நபர்கள் இன்று கோவை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத் துக்கு நேரில் வந்து பெயர் பரிந்துரை செய் யப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ஞானசேகரன் கூறியுள்ளார்.

**ஏலத்தில் தொடரும் விலை வீழ்ச்சியால் பாதிப்பில்லை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,21:14 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் விலை வீழ்ச்சி தொடர்கிறது; இருப்பினும், பசுந்தேயிலைக்கான விலையில் தொய்வு தென்படவில்லைகுன்னூர் தேயிலை ஏல மையத்தில் விற்பனை எண் 7க்கான ஏலம் நடந்தது. மொத்தம் 9.88 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு இருந்தது; இலை ரகம் 6.81 லட்சம் கிலோ, டஸ்ட் ரகம் 3.07 லட்சம் கிலோ அடங்கும். ஏற்றுமதி வர்த்தகத்தில், பாகிஸ்தான், ரஷ்ய நாட்டு வர்த்தகர்கள் பங்களித்தாலும், எதிர்பார்த்த அளவு தேயிலை தூளை அவர்கள் வாங்கவில்லை; மிகக்குறைந்த அளவு தேயிலை தூளை மட்டுமே வாங்கினர்.

கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் உட்பட வட மாநில வர்த்தகர்களின் பங்களிப்பும் குறைந்தது. இதனால், அனைத்து ரக தூளின் விலையும் கிலோ 2 ரூபாய் குறைந்தது; விற்பனைக்கு வந்த தேயிலை தூளில் 17 சதவீதம் தேங்கியது.சி.டி.சி., ரகத்தில் குன்னூர் ஹோம்டேல் தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 152 ரூபாய் விலை கிடைத்தது; 90க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன. ஆர்தோடக்ஸ் ரகத்தில் குன்னூர் ஹைபீல்டு தேயிலை தொழிற்சாலை வழங்கிய தூளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 174 ரூபாய் விலை கிடைத்தது; 35க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் 100 ரூபாய்க்கு மேல் விலை பெற்றன.இலை ரக விற்பனையில் சாதாரண ரக தூளுக்கு 47 - 54, சிறந்த ரக தூளுக்கு 80 - 135, டஸ்ட் ரகத்தில் சாதாரண ரக தூளுக்கு 56-60, சிறந்த ரக தூளுக்கு 90 - 135 ரூபாய் விலை கிடைத்தது.

விற்பனை எண் 8க்கான ஏலம் வரும் 24, 25 தேதிகளில் நடக்கவுள்ளது. மொத்தம் 9.50 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்குள்ளது; இலை ரகம் 6.67 லட்சம், டஸ்ட் ரகம் 2.83 லட்சம் கிலோ அடங்கும். இது கடந்த ஏலத்தை விட 38 ஆயிரம் கிலோ குறைவு. கடந்த ஒன்றரை

மாதத்துக்கு மேலாக 50 ரூபாயாக இருந்த ஒரு கிலோ தேயிலையின் குறைந்தபட்ச விலை கடந்த வாரம் 48 ரூபாயாக குறைந்து, தற்போது 47 ரூபாயாக சரிந்துள்ளது. இருப்பினும், சிறு விவசாயிகள் வழங்கிய பசுந்தேயிலைக்கு கிலோவுக்கு 13-15 ரூபாய் விலை கிடைத்தது.

**ஓட்டல்களில் உணவுப் பண்டங்கள் விலை விர்ர்ர்: கண்காணித்து கட்டுப்படுத்தினால் பணம் மிஞ்சும்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,21:10 IST

குன்னூர் : "ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலையேற்றத்தை கட்டுப்படுத்த வேண்டும்,' என வலியுறுத்தப்பட்டுள்ளது.வசம்பள்ளம் நுகர்வோர் பாதுகாப்பு சங்க கூட்டம் அதன் தலைவர் செல்வி தலைமையில் நடந்தது. கூட்டத்தில், சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.தங்காடு ஓரநள்ளியில் மாற்றிடத்தில் வீட்டு மனைப்பட்ட வழங்குவதாக மாவட்ட நிர்வாகம் உறுதியளித்தும் இதுவரை வழங்காமல் உள்ளது; விரைவில் வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டும். அனைத்து ரேஷன்கார்டுதாரர்களுக்கும் பருப்பு, உளுந்து உட்பட அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓட்டல்களில் அனைத்து உணவுப் பொருட்களின் விலையும் மிக அதிகளவு உயர்த்தப்பட்டுள்ளது; பெரும்பாலான ஓட்டல்களில் 20 ரூபாய்க்கு சாப்பாடு வழங்க வேண்டும் என்ற உத்தரவு பின்பற்றப்படுவதில்லை.

சம்மந்தப்பட்ட துறை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். குன்னூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு சிறப்பு மருத்துவர் இல்லாததால், அவசர சிகிச்சை காலங்களில் கோவை, ஊட்டி செல்ல வேண்டியுள்ளது; இதனால், கர்ப்பிணிகள் பாதிக்கின்றனர். குன்னூர் அரசு மருத்துவமனையில் பெண் மகப்பேறு சிறப்பு மருத்துவரை நியமிக்க வேண்டும் என்பன உட்பட சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்தில், சங்க துணைத் தலைவர் கிருஷ்ணசாமி, செயலாளர் வீரபாண்டியன், பொருளாளர் விஜயகுமார், இணை செயலர் சுப்ரமணி, சாந்தி, ரத்தினம், கமலம் உட்பட பலர் பங்கேற்றனர்.

**தாண்டிக்குடியில் காளான் வளர்ப்பு தொழில் அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,22:35 IST

தாண்டிக்குடி : தாண்டிக்குடி மலைப்பகுதியில் காளான் வளர்க்கும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தாண்டிக்குடி மலைப்பகுதிகளான பட்லாங்காடு, தாண்டிக்குடி, கொடலங்காடு பகுதிகளில் காளான் வளர்ப்பு இத்தொழிலில் ஏராளமான விவசாயிகள்

ஈடுபட்டுள்ளனர். பால் , சிப்பி, பட்டன் காளான் என மூன்று வகை இருந்தாலும் கோடை காலத்தில் சிப்பி காளான், குளிர் காலத்தில் பட்டன் காளான் வளர்க்கப்படுகிறது. பக்குவப்படுத்தப்பட்ட கம்போஸ்ட் உரத்தில் பாலித்தீன் பைகள் மூலம் 100 கிராம் விதைகள் இட்ட பட்டன் காளான் 62 நாளில் பறிக்க துவங்கி தொடர்ந்து 90 நாள் வரை பலன் தருகிறது. சிப்பி காளான் நடவு செய்த 32 நாள் முதல் 90 நாள் வரை உற்பத்தி கிடைக்கிறது. ஒரு பையில் சராசரியாக ஒரு கிலோ முதல் இரண்டு கிலோ வரை காளான் கிடைக்கிறது. உற்பத்தி செய்யப்படும் காளான்கள் பல்வேறு இடங்களுக்கு ஒரு கிலோ. ரூ.150 முதல் 200 வரை விற்கப்படுகிறது.

**வாத்துக்குஞ்சுகள் விற்பனை அமோகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 21,2011,22:54 IST

மானாமதுரை : மானாமதுரை பகுதியில் வாத்து குஞ்சுகள் விற்பனை அமோகமாக நடக்கிறது. சேலம், தர்மபுரி மாவட்டங்களில் இருந்து வாத்துக்குஞ்சுகள் வாங்கப்பட்டு, இங்கு சிறு வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிறது. நெல் அறுவடை முடிந்த வயல்களில் கம்பு, சோளம், கேழ்வரகு போன்ற தானியங்கள் பயிரிடப்பட்டு, பிப்ரவரியில் அறுவடை முடியும். இந்த நிலங்களில் சிதறி கிடக்கும் தானியங்கள், வாத்துகளுக்கு உணவாகும். தற்போது வாத்து மேய்ப்பவர்கள் குறைந்து விட்டதால், தானியங்கள் முளைத்து விடுகின்றன. இதை தவிர்க்க வயல்களில் ஆடு, மாடு பட்டி போடும் வழக்கம் இருந்து வருகிறது. கால்நடைகள் குறைந்ததால், வாத்து வளர்ப்பு விவசாயிகளுக்கு கைகொடுக்கிறது. ஆண்டுதோறும் சேலம் மாவட்ட வியாபாரிகள், இங்கு வாத்து குஞ்சுகளை விற்பனை செய்து வருகின்றனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம் அனைத்து வகை அரிசி ஏற்றுமதிக்கும் கட்டுப்பாடுகளை தளர்த்த கோரிக்கை**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சகம், அனைத்து வகை அரிசி ஏற்றுமதியிலும் கட்டுப்பாடுகளை நீக்கும்படி உணவுத் துறைக்கான அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.*

*தென் மாநிலங்கள்*

*இம்மாத தொடக்கத்தில் 1.50 லட்சம் டன் அளவிற்கு உயர்தர அரிசி ரகங்களான சோனா மசூரி, பொன்னி மற்றும் மட்டா ஆகியவற்றை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்தது. இந்த ரகங்கள் அனைத்தும் தமிழகம், கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா ஆகிய நான்கு தென் மாநிலங்களில்தான் விளைகின்றன.*

*நெல் உற்பத்தியாளர்களிடையே எந்த வித பாகுபாடும் காட்டக் கூடாது என்றும், அனைத்து ரகங்களும், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையுடன், ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வர்த்தக அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. அரிசியின் குறைந்தபட்ச ஏற்றுமதி விலை தற்போது டன் ஒன்றுக்கு 850 டாலராக உள்ளது. அதாவது இந்த விலைக்கு குறைவாக வெளிநாடுகளில் விற்பனை செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.*

*சர்வதேச அளவில், நெல் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.*

உள்நாட்டில் விலை உயர்வை தடுக்கும் வகையில், கடந்த 2008–ஆம் ஆண்டில் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் பாசுமதி அரிசி ஏற்றுமதி மீதான தடை மட்டும் நீக்கப்பட்டது. மேலும் குறைந்த ஏற்றுமதி விலை டன்னுக்கு 1,300 டாலர் என்ற அளவிலிருந்து 900 டாலராகவும் குறைக்கப்பட்டது.

அரிசி கையிருப்பு

அனைத்து அரிசி ரகங்களும் டன் 850 டாலர் என்ற விலையில் ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்டால் அதிகபட்சம் 5 லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்யலாம். அதற்கேற்ப கையிருப்பு உள்ளது. அதேசமயம் விலை மலிவான அரிசி ரகங்களின் ஏற்றுமதியை அனுமதிக்க வேண்டும் என்று நாங்கள் கேட்கவில்லை என அவர் மேலும் கூறினார். தற்சமயம் அரசு சேமிப்புக் கிடங்குகளில் 2.78 கோடி டன் அரிசி கையிருப்பு உள்ளது. இது நிர்ணயித்த இலக்கான 1.18 கோடி டன்னைக் காட்டிலும் 1.60 கோடி டன் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

## குன்னூர் ஏல மையத்தில் விற்பனை மந்தம்: 17 சதவீத தேயிலை தூள் தேக்கம்

குன்னூர், பிப்.22–

குன்னூர் ஏல மையத்தில் விற்பனை மந்தமாக இருந்ததால் 17 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.

தேயிலை ஏலம்

குன்னூர் ஏல மையத்தில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடைபெற்று வருகிறது. விற்பனை 7–க்கான ஏலம் கடந்த 17, 18 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. ஏலத்துக்கு மொத்தம் 9 லட்சத்து 88 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 6 லட்சத்து 81 ஆயிரம் கிலோ இலைரகமும், 3 லட்சம் 7 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

இந்த ஏலத்தை பொறுத்த வரை விற்பனை மிகவும் மந்தமாக இருந்தது. ஏற்றுமதி யாளர்களின் பங்களிப்பு மிகவும் குறைந்து இருந்தது. ரஷ்யா, பாகிஸ்தான் ஆகிய 2 நாடுகளின் வர்த்தகர்கள் மட்டுமே தேயிலை தூளை வாங்கினார்கள்.

தேக்கம்

உள்நாட்டு வர்த்தகம் சுமாராக இருந்தது. ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகம் மந்தமாக இருந்ததால், 17 சதவீத தேயிலை தூள் விற் பனையாகாமல் தேக்கம் அடைந்தது. இதன் காரணமாக ரூ.2 விலை வீழ்ச்சி ஏற்பட் டது.

சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக ரூ.152 இருந்தது. 90 தொழிற்

சாலைகள் தங்களது தேயிலை தூளை ரூ.100க்கு விற்பனை செய்தன. ஆர்தோடக்ஸ் தூள் உயர்ந்தபட்ச விலையாக ரூ.174க்கு ஏலம் சென்றது. 35 தொழிற்சாலைகள் தங்களது தூளை ரூ.100க்கு மேல் விற்பனை செய்தன.

தேயிலை தூளின் சராசரி விலையாக இலை ரகத்தின் சாதாரண வகை ரூ.47–ல் இருந்து ரூ.54 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.80–ல் இருந்து ரூ.135 வரையிலும் ஏலம் சென்றன.

டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை ரூ.56–ல் இருந்து ரூ.60 வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் ரூ.90–ல் இருந்து ரூ.135 வரையிலும் ஏலம் சென்றன.

விற்பனை எண் 8–க்கான ஏலம் வருகிற 24, 25 ஆகிய தேதிகளில் நடக்கிறது.

ஏலத்துக்கு மொத்தம் 9 லட்சத்து 50 ஆயிரம் கிலோ விற்பனைக்கு வருகிறது.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை
வெரிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,850-2,870

### மணிலா பயறு
80 கிலோ கொண்ட மூட்டை
3,300-3,350

### கடலை எண்ணெய்
ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,500-00

### கடலை புண்ணாக்கு
70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450-00

### தேங்காய் எண்ணெய்
15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரிஉள்பட) 1,810-00

### நல்லெண்ணெய்
குமாருரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால்(வரிஉள்பட) 11,500-00
டின் (15கிலோ) 1,700-00

### விளக்கெண்ணெய்
ஒருகுவிண்டால் (வரிஉள்பட)
12,300.00
15கிலோடின் (வரிஉள்பட) 1,700-00

### சூரியகாந்தி எண்ணெய்
சுத்திகரிக்கப்பட்டது 15கிலோ
டின் (வரிஉள்பட) 1,180.00

### ரீபைண்டு ஆயில்
(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின்(வரிஉள்பட) 1,300.00

### வனஸ்பதி
டின் ஒன்றுக்கு (வரிஉள்பட)1,1100.00

### பாமாயில்
10 கிலோ டின் (வரி தனி)
600-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.21-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உ.பருப்பு(வெள்ளை) | ரூ. 6,900 | 73.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டல் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ 2,000 | 22.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,900 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,பிப்.21-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. வி.797 22எம்.எம் | ரூ. | 13,157 |
| 2. ஜெயதாரி 22 எம்.எ | ரூ. | ——— |
| 3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 16,207 |
| 4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 16,591 |
| 5. சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 16,591 |
| 6. எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 16,872 |
| 7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 23,058 |

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.21-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 43-00 | கலர்கோஸ் | ரூ. | 26-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 24-22 | புதினா | ரூ. | 16-00 |
| வெண்டைக்காய் | ரூ. | 14-15 | காலிப்பிளவர் | ரூ. | 15-16 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 5-6 | பொறியல் தட்டை | ரூ. | 18-20 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6-50 | பச்சை மொச்சை | ரூ. | 30-00 |
| புடலை | ரூ. | 16-18 | தேங்காய் | ரூ. | 14-15 |
| பீர்க்கான்காய் | ரூ. | 22-00 | பட்டாணி | ரூ. | 60-32 |
| சுரைக்காய் | ரூ. | 13-14 | பூண்டு | ரூ. | 160-200 |
| பாகற்காய் | ரூ. | 14-15 | கறிவேப்பிலை | ரூ. | 52-00 |
| கொத்தவரை | ரூ. | 22-00 | அகத்தி | ரூ. | 14-00 |
| பூசணிக்காய் | ரூ. | 22-00 | வாழைக்காய் | ரூ. | 18-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 10-11 | திராட்சை | ரூ. | 30-00 |
| மேராக்காய் | ரூ. | 14-00 | குடைமிளகாய் | ரூ. | 28-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 14-00 | சாதா பீன்ஸ் | ரூ. | 18-00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 15-00 | டபுள்பீன்ஸ் | ரூ. | 30-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 32-34 | கறிபீன்ஸ் | ரூ. | 20-26 |
| பெரியவெங்காயம் | ரூ. | 18-00 | புஸ்பீன்ஸ் | ரூ. | 14-16 |
| இஞ்சி | ரூ. | 33-00 | காளான் | ரூ. | 80-140 |
| முருங்கைக்காய் | ரூ. | 80-100 | இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 19-20 | சப்போட்டா1கிலோ | ரூ. | 16-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 20-00 | கொய்யா1கிலோ | ரூ. | 22-00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 | மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 | பப்பாளி 1 கிலோ | ரூ. | 17-16 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 | வரமிளகாய் | ரூ. | 80-00 |
| சக்கரவள்ளி கிழங்கு | ரூ. | 14-00 | ஆப்பிள் | ரூ. | 110-00 |
| முள்ளங்கி | ரூ. | 7-8 | சாத்துக்குடி | ரூ. | 28-00 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 28-30 | நெல்லிக்காய் | ரூ. | 44-20 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12-15 | ஆரஞ்சு | ரூ. | 38-00 |
| நூல்கோல் | ரூ. | 18-20 | வெள்ளரி | ரூ. | 16-30 |
| கொத்தமல்லி | ரூ. | 14-00 | புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 18-20 | பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 10-12 | அவரை | ரூ. | 17-24 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.21300 |
| மிளகு (சேட்டன்) | ரூ.21700 |
| மிளகு (வயநாடன்) | ரூ.22300 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7300 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 7200 |
| சுக்கு(புதியது) | ரூ.16000 |
| சுக்கு(பழையது) | ரூ.7800 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.9850 |
| கொப்பரை நாடன் | ரூ.6800 |
| கொப்பரை ராசு | ரூ.6450 |
| கொப்பரை தில்பசன் | ரூ.6850 |
| கொப்பரை ராஜீப்பூ | ரூ.7100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6500 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 24000 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 23150 |
| ரப்பர் பால் | ரூ. 14800 |
| காப்பி | ரூ. 9300 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 2800 |
| நேந்திரகாய் | ரூ. 1200 |
| இஞ்சி | ரூ. 1400 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.21-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லறை விலை |
|---|---|---|
| ரீபைன்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 85.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1220 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 110.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1530 | 120.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,730 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 63.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,280 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,040 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,100 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | - |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.500.00 | ரூ. 650.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 4.00 | ரூ. 6.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.25.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.6.00 | ரூ.8.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.3.00 | ரூ.4.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.7.00 | ரூ.10.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| மேராக்காய் | ரூ.6.00 | ரூ.8.00 |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.303.00 | அதிகபட்சவிலை | ரூ.390.00 |
| சராசரி விலை | ரூ.301.94 | சராசரி விலை | ரூ.365.80 |
| குறைந்தபட்சவிலை | ரூ.301.00 | குறைந்தபட்சவிலை | ரூ.329.00 |

**பட்டு நூல் ரூ.2,730**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,328.00 | 15,520.00 | 15,520.00 |
| ஒரு கிராம் | 1,916.00 | 1,940.00 | 1,940.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 55,065.00 | 53,200.00 | 53,500.00 |
| ஒரு கிராம் | 53.55 | 53.20 | 53.50 |

## ஒழுங்கு முறை விற்பனை கூடம்

### மஞ்சள் (கோவை)

| | |
|---|---|
| தனிவிரலி | ரூ.12006-12006 |
| தனிகிழங்கு | ரூ.9505-11006 |

### தேங்காய்

| | |
|---|---|
| பொள்ளாச்சி | ரூ.500-900 |
| ஆனைமலை | ரூ.550-700 |
| நெகமம் | ரூ.500-600 |
| மடத்துக்குளம் | ரூ.500-600 |
| பெதப்பம்பட்டி | ரூ.500-600 |
| செஞ்சேரி | ரூ.500-650 |

### மக்காச்சோளம்

| | |
|---|---|
| உடுமலை | ரூ.1050-1080 |
| மடத்துக்குளம் | ரூ.1020-1020 |
| பெதப்பம்பட்டி | ரூ.1000-1020 |
| செஞ்சேரி | ரூ.1000-1070 |

### தேங்காய்பருப்பு

| | |
|---|---|
| பெதப்பம்பட்டி | ரூ.6700-6800 |

### புகையிலை

| | |
|---|---|
| பல்லடம் | ரூ.2500-3500 |